Groundnut

* 288 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the quantity of groundnut grown in our State during 1955–56 and during 1965–66 ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தமிழ் நாட்டில் 1955–56, 1965–66 ஆண்டுகளில் பயிரிடப்பட்ட வேர்க்கடலேயின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	பரப்பளவு (ஏக்கரில்).	உற்பத்தி (டன்களில்).
1955–56	17,98,604	8,43,109
1965–66	22,69,000	9,11,180

திரு. கே. விஞயகம் : தலைவர் அவர்களே, இந்தக் கணக்கில் பார்த்தால், பத்து ஆண்டுகளுக்கு முன்னாலே எந்த அளவு மணிலா பயிரானதோ அதைவிட இப்போது அதிகரித்திருக்கிறது. அதற்குக் காரணம் அதற்கு அதிக விலை கிடைக்கிறது. ஏராளமாக நெல் சாகுபடி செய்கிற நிலத்தில் எல்லாம் மணிலா பயிர் செய்யப்பட்டு வருகிறது. நெல் சாகுபடியைவிட மணிலா பயிரினால் அதிக லாபம் கிடைப்பதால் விவசாயிகள் நெல் விளையும் நிலத்திலும் மணிலா பயிரிடுகிறார்கள். ஆகவே, அவர்கள் அப்படிச் செய்யாமல் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ? நெல் விளையும் நிலத்தில் மணிலா சாகுபடி செய்வதற்கு தடை ஏற்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினருடைய கேள்வியிலிருந்து, தவறான முயற்சியில் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. மணிலா பயிரினால் அதிக வருவாய் கிடைக்கிறது என்பதில் அரசாங்கத்திற்கு ஆட்சேபணை கிடையாது என்றாலும், மக்களுக்கு உணவு அளிப்பதில் இந்த அரசு சிரத்தை கொண்டிருக்கிறது. மணிலா கடந்த பத்தாண்டுகளில் கணிசமாக உற்பத்தியாகியிருக்கிறது. நெல் விளையும் நிலத்தில் மணிலா பயிரிட விவசாயிகள் ஈடுபடுவார்களானால், தக்க சமயத்தில் நடவடிக்கை எடுப்பதுபற்றி அரசு ஆலோசிக்கும்.

*289 Q.—Thiru K. VINAYAKAM :
Thiru MUNU. ADHI : } Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that large scale sugarcane, banana and groundnut cultivation is carried on where paddy was grown previously ; and

(*b*) if so, the steps proposed to be taken to check this fall in paddy cultivation.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) முன்னர் நெல் விளைவிக்கப்பட்ட நிலப்பரப்புகளில் இப்போது கரும்பு, வாழை, வேர்க்கடலை எதுவும் அதிக அளவில் பயிரிடப்படவில்லை. எனினும், அவ்வாறு பயிரிடப்படுவதன் போக்கு பற்றி அரசு விழிப்புடன் கவனித்து வருகிறது.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. கே. விஞயகம் : ஐயா, இப்படி நெல் பயிரிடும் நிலங்களையெல்லாம் வாழைத் தோட்டமாகவும், கரும்புத் தோட்டமாகவும் அல்லது 'பணப்பயிர்கள்' நிலமாகவும் மாற்றுவதற்குக் காரணம், நெல்லுக்கு இருக்கிற விலை—நெல்லுக்கு அரசாங்கம் கொடுக்கிற விலையாயினும் சரி—'ஓபன் மார்க்கெட்டிலும்' தருகிற விலையாயினும் சரி, மற்ற பயிர்கள் விடக் குறைவாக இருப்பதேயாகும். அதனால் விவசாயிகள் மக்களுடைய உணவுப் பிரச்சினையைப் பற்றிக் கவலை கொள்ளாமல், அதிக லாபத்தைத்